

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (2.5.2025) அன்று தலைமைச் செயலகத்தில், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்று, பயிற்சி பெற வந்துள்ள தமிழ்நாட்டிற்கான இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் டி. புவனேஸ்வரன், டாக்டர் சி. விநோதினி, டாக்டர் எஸ். பிரசாந்த், டாக்டர் எம். சுபதர்ஷினி, ஆர். வெங்கடேஸ்வரன், அம்ருதா எஸ். குமார், டி. மாலதி, கே.எம். கார்த்திக் ராஜா, விவேக் யாதவ், காஞ்சன் சவுத்திரி, கிருத்தி காம்னா, ராகுல் குமார், சேத்ரிமாயும் தீபி சானு ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், ப.,மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (2.5.2025) தலைமைச் செயலகத்தில், நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாடு பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.05.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 151 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ. தட்சிணா மூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த. ஆபிரகாம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று ( 2.05.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 151 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், , வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த. ஆபிரகாம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல்பாண்டியன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1.5.2025 அன்று திருவள்ளூர் மாவட்டம் ஈக்காடு கண்டிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் கீழ் திருவள்ளூர் புறவழிச்சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30.10 கி.மீட்டர் நீளத்திற்கு புதிய ஆறு வழிச்சாலை மற்றும் சாலையின் இருபுறமும் இரு வழித்தடத்தினை கொண்ட சேவைச் சாலை அமைத்தல் பணிகளை தொடங்கி வைத்து, சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் புகைப்படங்களை பார்வையிட்டார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, வி.ஜி.இராஜேந்திரன், எஸ்.சந்திரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர். இரா.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் ஆகியோர் உடனிருந்தனர்.

### ரூ.2689.70 கோடி மதிப்பில் சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தின் கீழ்

# புதிய ஆறு வழிச்சாலை - சேவைச் சாலை அமைக்கும் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மே 3 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் புறவழிச் சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30.10 கி.மீட்டர் நீளத்திற்கு புதிய ஆறு வழிச்சாலை மற்றும் சாலையின் இருபுறமும் இரு வழித்தடத்தினை கொண்ட சேவைச் சாலை அமைத்தல் பணிகளை தொடங்கி வைத்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சார்பில் நேற்று முன்தினம் (1.5.2025) திருவள்ளூர் மாவட்டம் ஈக்காடு கண்டிகையில் நடைபெற்ற நிகழச்சியில் சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் கீழ் திரு வள்ளூர் புறவழிச்சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 30.10 கி.மீட்டர் நீளத்திற்கு கடினப்புருவத்துடன் கூடிய புதிய ஆறு வழிச்சாலை மற்றும் சாலையின் இருபுறமும் இரு வழித்தடத்தினை கொண்ட சேவைச் சாலை அமைத்தல் பணிகளை தொடங்கி வைத்தார்.

**தொழில் வளங்களை அதிகரிக்க!**

தமிழ்நாட்டின் வடக்கு மற்றும் தென் மாவட்டங்கள், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வரும் கனரக வாகனங்கள் எண்ணூர் மற்றும் காட்டுப் பள்ளி துறைமுகங்களுக்கு எளிதாக சென்றடையவும், கனரக வாகன போக்குவரத்தால் ஏற்படும் நெருக்கடியை குறைப்பதற்கும், வணிக மற்றும் தொழில் வளங்களை அதிகரிக்கவும் சென்னை எல்லைச் சாலை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இச்சாலை எண்ணூர் துறைமுகத்திலிருந்து மாமல்லபுரம் வரை 132.87 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படவுள்ளது.

சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பிரிவு - 3 ன் கீழ் திருவள்ளூர் புறவழிச்சாலை முதல் திருப்பெரும்புதூர் வரை 30.10 கி.மீ நீளத்திற்கு புதிய ஆறுவழிச்சாலை மற்றும் இருவழி சேவைச்சாலை (இருபுறமும்) அமைக்க மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு, திருவள்ளூர் புற வழிச் சாலை யிலிருந்து வெங்காத்தூர் வரை 10.40 கி.மீ நீளத்திற் ற்கான சாலைப் பணிகள் 1,133.20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வெங்காத்தூர் முதல் செங்காடு வரை 10.00 கி.மீ நீளத்திற்கான சாலைப் பணிகள் 593.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், செங்காடு முதல் திருப்பெரும்புதூர் வரை 9.70 கி.மீ நீளத்திற்கான சாலைப் பணிகள் 963.27 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் என மொத்தம் 30.10 கி.மீட்டர் சாலைப் பணிகள் 2,689.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.

இப்பணியில், 2 உயர்மட்ட மேம்பாலங்கள், 1 இரயில்வே மேம்பாலம் மற்றும் 2 பெரிய பாலங்கள் கட்டப்படவுள்ளன.

மேலும் சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு1 ன் கீழ் எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி தச்சூர் வரை 2,122.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு செயல்படுத்தப்படுகிறது. பிரிவு1 ன் கீழ் தற்போது வரை 35 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன.

சென்னை எல்லைச் சாலைத் திட்டம் பிரிவு2 ன் கீழ் தச்சூரில் தொடங்கி திருவள்ளூர் புறவழிச்சாலை வரை 1,539.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 26.10 கிலோ மீட்டர் நீளத்திற்கு செயல்படுத்தப்படுகிறது. பிரிவு2 ன் கீழ் தற்போது வரை 68 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன.

**விரிவான திட்ட அறிக்கை!**

சென்னை எல்லைச் சாலைத் திட்டம் பிரிவு - 4 ஆனது திருப்பெரும்புதூரில் தொடங்கி சிங்கப்பெருமாள் கோயில் வரை 23.80 கி.மீ நீளம் கொண்டதாகும். இச்சாலை மாநில அரசின் செலவில் ஏற்கனவே ஆறு வழிச்சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையை சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் தரத்திற்கு ஏற்ப உயர்த்தி நுழைவு கட்டுப்படுத்தப்பட்ட சாலையாக அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சென்னை எல்லை சாலைத் திட்டம் பிரிவு - 5 ஆனது சிங்கப் பெருமாள் கோயில் முதல் மாமல்லபுரம் அருகே பூஞ்சேரி சந்திப்பு வரை மொத்தம் 28.24 கி.மீ நீளம் அமைக்கப்படவுள்ளது. தற்போது நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ண சாமி, வி.ஜி.இராஜேந்திரன், எஸ்.சந்திரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர். இரா. செல்வராஜ் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் எஸ்.பழனிவேல் உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

